நகர்ப்புற நிலவரி

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி நகர்ப் பகுதியில், 1384 பசலி ஆண்டுக்கு விதிக்கப்பட்ட நகர்ப்புற நிலவரி மொத்தம் எவ்வளவு ?

(இ) மேற்படி வரி மதிப்பீடு, வரித்தண்டல் வகையில் இவ்வாண்டில் அரசுக்கு ஏற்பட்ட மொத்தச் செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ரூபாய் 13,61,919.10.

(இ) (i) நகர்ப்புற நிலவரி மதிப்பீட்டுக்கான செலவு—ரூ. 1,77,149.17.

(ii) நகர்ப்புற நிலவரி வசூலுக்கான செலவு—ரூ. 20,887.47.

திரு. கே. எஸ். கணபதி : இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கும் அடிப்படை மாற்றத்தினால் இன்னும், எவ்வளவு அதிகமாக அரசுக்கு வருமானம் வருமென்று மதிப்பிடப்பட்டுள்ளது என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இன்னும் கணக்கு வரவில்லை.

(பிற்பகல் 4-20)

Multi-purpose Co-operative Credit Society at Malaiveppankuttai, Namakkal taluk.

*110. *Q.*—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the Government have received any petition regarding the election of office-bearers on 1st November 1974 to the Multi-purpose Co-operative Credit Society at Malaiveppankuttai, Namakkal taluk; and

(*b*) if so, the action taken thereon?

மலைவேப்பன்குட்டை பலநோக்குக் கூட்டுறவு நாணயச் சங்கம், நாமக்கல் தாலுகா.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நாமக்கல் தாலுகாவிலுள்ள மலைவேப்பன்குட்டை பலநோக்குக் கூட்டுறவு நாணயச் சங்கத்தில் 1—11—1974-ல் நடைபெற்ற நிர்வாகிகள் தேர்தல் பற்றி அரசுக்கு மகஜர் ஏதும் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

1975 நவம்பர் 11]

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : (அ) & (இ) மலைவேப்பன் குட்டை பலநோக்கு கூட்டுறவு நாணயச் சங்கத்தில் 1—11—74 அன்று நடைபெற்ற தலைவர் தேர்தல் குறித்து அதிருப்தி தெரிவித்து 25—2—75 அன்று அரசுக்கு வந்த புகார் மனு அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மலைவேப்பன்குட்டை பல நோக்கு கூட்டுறவு நாணயச் சங்கத்தில் தலைவர் தேர்தலை அங்குள்ள நிர்வாகஸ்தர்கள் எல்லாம் வெளியில் போன பிறகு, ரகசியமாக நடத்தினார்களா ? அப்படியானால் அதனுடைய 'ரிசல்ட்' என்ன ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இந்தத் தேர்தல் முறையாக நடக்க வில்லை, மறுதேர்தல் நடத்த வேண்டும், தேர்தல் செல்லாது என்று அவர்கள் 25—2—1975 அன்று அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். தேர்தல் ஆணை 73 விதியின்படி அவர்கள் 31—12—74க்குள் தேர்தல் செல்லாது என்று மனு கொடுத்திருக்கவேண்டும். ஆனால் அவர்கள் கொடுத்திருப்பது 25—12—1975-ல் தான். மேலும் அங்கு நடைபெற்ற தேர்தலைப் பற்றி விசாரித்ததில், அது முறையாகத்தான் நடத்தப்பட்டிருக்கிறது என்று தெரிய வருகிறது. அவர்கள் குறித்த காலத்திலே, 4 மணிக்கு, அறிவிப்புப் பலகையில் தேர்தல் பற்றி அறிவிப்பு கொடுத்து, விதிப்படி தேர்தல் நடந்திருக்கிறது. தவறாக நடக்கவில்லை.

திரு. சி. வி. ராஜகோபால் : கூட்டுறவு இயக்கங்களில் தலைவர் தேர்தல் பரபரப்பாக நடத்தப்படுகிறது. அப்போதே நாமினேஷன் கொடுப்பது, அந்த நிமிஷமே ஓட்டுக்கு விடுவது, உடனே 'டிக்ளேர்' செய்து விடுவது என்றெல்லாம் நிமிஷக்கணக்கில் தேர்தல் நடக்கின்றது. ஆகையால் தேர்தலுக்கு நிற்க விரும்பும் அங்கத்தினர்களுக்கு தகவல் தெரிய வாய்ப்பு இல்லாமலேயே போய்விடுகிறது. இரண்டு நாட்களுக்கு முன் அறிவிப்பு கொடுத்து, பிறகு தேர்தல் நடத்தினால், நன்றாக இருக்கும். பழைய முறைகளை மாற்றி, இப்போது புதிய முறைகளிலே நடத்துகிறார்கள். இது ஜனநாயக நாடு. ஜனநாயக முறையிலே தேர்தல் நடக்க வேண்டும். ஆகையால் புதிய முறைகளைக் கையாளாமல் பழைய முறைகளிலே தேர்தல் நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : பழைய முறையிலே ஜனநாயக முறைப்படி தேர்தல் நடந்துகொண்டிருக்கிறது.